செ.வெ.எண்: 25/ 2020 நாள்: 20.04.2020

**திருப்பூர் மாவட்டத்திற்கு முதற்கட்டமாக கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை செய்யும் 2400 விரைவு சோதனை கருவிகள் (ரேபிட் கிட்) வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் தகவல் !!!**

திருப்பூர் மாவட்ட ஆட்சியராக அலுவலக கூட்டரங்கில், திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து துறை அலுவலர்களுடான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் இன்று (20.04.2020) நடைபெற்றது.

***இக்கூட்டத்தில், மாண்புமிகு கால்நடைபராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,***

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் நமது மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தங்குதடையின்றி கிடைத்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சுகாதாரத்தை காக்கும் வகையில் கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிகள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகிய பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் சிரமமின்றி கிடைப்பதற்கு முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து வருவாய் வட்டங்களிலும் கிசிச்சைக்காக தனி வார்டுடன் கூடிய மருத்துவமனைகளும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வைரஸ் பாதிப்புள்ள அனைத்து பகுதிகளிலும் இன்னும் நோய் அறிகுறிக்கு வாய்ப்புள்ளதென கருதப்படும் அனைவருக்கும் பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் நமது மாவட்டத்திற்கு 2400 விரைவு சோதனை கருவிகள் வரப்பெற்றுள்ளது. இதன்மூலமாக விரைவாக சோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்படும். என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். 144 தடை உத்தரவு மே 3 ம்தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பினயும் வழங்கி சமூக விலகளை கடைபிடிக்க வேண்டுமெனவும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பினையும் வழங்க வேண்டும் என மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, திருப்பூர் மாநகராட்சி, 5 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 13 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டு சுகாதாரத்தை காக்கும் வகையில் தூய்மை பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை அலுவலர்கள் முறையாக வழங்கிட வேண்டுமெனவும், மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள் பாதுகாப்புடனும் மற்றும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், திருப்பூர் மாவட்டத்திற்கு வரப்பெற்றுள்ள கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை செய்யும் விரைவு சோதனை கருவியின் (ரேபிட் கிட்) மூலம் பரிசோதனை மேற்கொள்வதையும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு திருப்பூர் பூலுவபட்டி ரிங்ரோடு ஏ.பி.எஸ். அகாடமி சார்பில் ரூ.1.00 இலட்சத்திற்கான வரைவோலையினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் பள்ளி நிர்வாகிகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சு.குணசேகரன் (திருப்பூர் தெற்கு), திரு.கரைப்புதூர் ஏ.நடராஜன் (பல்லடம்), திரு.கே.என்.விஜயகுமார் (திருப்பூர் வடக்கு), திரு.உ.தனியரசு (காங்கயம்), தாராபுரம் சார் ஆட்சியர் திரு.பவன்குமார் இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையர் திரு.சஞ்சய்குமார் இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.திஷா மிட்டல், இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் திரு.பத்ரிநாராயணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.ஆர்.சுகுமார், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.க.சிவகுமார், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.கவிதா (திருப்பூர்), திரு.ரவிக்குமார் (உடுமலைப்பேட்டை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.எம்.சாகுல் ஹமீது (பொது), திரு.பாலசுப்பிரமணியன் (ஊராட்சிகள்) திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.வள்ளி, பொதுசுகாதாரப்பணிகள் இணை இயக்குநர் மரு.சாந்தி, துணை இயக்குநர் மரு.ஜெகதீஸ்குமார், காவல் துறை மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**